செ.வெ.எண்:82 நாள்:25.07.17

## அனைத்து விவசாயிகளும் பிரதம மந்திரியின் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பு

திருநெல்வேலி மாவட்டத்தில் 2017-18 காரீப் பருவத்தில் பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பிற்கு மகசூல் அடிப்படையில் இழப்பீடு கணக்கிடு செய்யப்பட்டு அதனடிப்படையில் இழப்பீட்டு தொகை வழங்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, செங்கோட்டை மற்றும் அம்பாசமுத்திரம் பகுதியில் சுமார் 650 எக்டர் பரப்பில் கார் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெற்பயிர்களை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர் கடன் மற்றும் விவசாய நகைக் கடன் பெறும் விவசாயிகள் கட்டாய அடிப்படையிலும், இதர விவசாயிகள் விருப்பத்தின் அடிப்படையிலும் இத்திட்டத்தின் கீழ் பங்கு பெறலாம். பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வட்டாரங்களில் செயல்பட்டு வரும் பொது சேவை மையங்களில் காப்பீட்டு தொகையினை செலுத்தி இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம். பொது சேவை மையங்கள் காலை 09.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை அனைத்து தினங்களிலும் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை உட்பட) செயல்படும்.

நடப்பு காரீப் பருவம் 2017-2018ம் ஆண்டிற்கு நெற் பயிருக்கான சாகுபடி செலவு தொகை ஏக்கருக்கு ரூ.23,500/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே நெல் நடவு செய்த விவசாயிகள் தக்க ஆவணங்களுடன் காப்பீட்டு தொகை ஏக்கருக்கு ரூ.470/- 31.07.2017க்குள் மேற்குறிப்பிட்ட இடங்களில் செலுத்தி தங்கள் பயிரினை காப்பீடு செய்து கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

வெளியீடு:
செ.ம.தொ.அ. திலி.

மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி
25/7/17